கட்டிடம் கட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியும். ஏதாவது ஒரு வகையிலே செய்ய முடியாது. ஆகவே, அவர் உரிய வழியில் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *376,* திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

376-

பீடித் தொழிலாளர்களுக்கு எலும்புருக்கி நோய் ஏற்படுவதைத் தடுத்தல்

***23168-**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :*

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளருக்கு எலும்புருக்கி நோய் (T.B.) ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பொதுவாக பீடித் தொழிலாளர்களில் பலர் நாளடைவில் எலும்புருக்கி நோயின் (T.B.) பாதிப்பிற்கு ஆளாவது உண்மைதான்.

(ஆ) பீடித் தொழிலாளர்கள் நலனுக்கென பீடித் தொழிலாளர் நல நிதிச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிகள் உருவாக்கப்பட்டு அது மத்திய அரசால் அமல்படுத்தப்படுகிறது. எலும்புருக்கி நோயினால் பாதிக்கப்படும் பீடித் தொழிலாளர்களுக்கு Domicillary Treatment என்ற திட்டத்தின் கீழ் மத்திய அரசு மருத்துவ வசதி அளித்து வருகிறது.

முற்பகல் 10-40

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. விவசாயத்திற்கு அடுத்தபடியாக ஒவ்வொரு கிராமத்திலும் வீடுகளில் பீடித்தொழிலில் ஆண்களும் பெண்களும் அதிக அளவில் ஈடுபட்டு வருகிறார்கள். காலையிலும் மாலையிலும் பல ஆண்டுகளாக தொடர்ந்து செய்து வருவதால் பீடித் தொழிலாளர்கள் காச நோயினால்

பாதிக்கப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. காச நோயினால் பாதிக்கப்பட்ட அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரவேல், சிகிச்சை எவ்வாறு அளிக்கப்படுகிறது என்பதையெல்லாம் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சொல்ல முடியாது, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம்தான் கேட்கவேண்டும். இது தொழிலாளர் நலத்துறை அமைச்சருடைய அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிபார்ட்மென்ட் தான்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காச நோயால் பாதிக்கப்பட்ட பீடித் தொழிலாளர்களுக்கு என்று ஒரு தனியான திட்டத்தின்கீழ் மத்திய அரசு மருத்துவ வசதி அளித்து வருகிறது. பெருந்துறை டி.பி.சானடோரியத்தில் பீடித் தொழிலாளர்களுக்கென்று தனியாக படுக்கைகள் ஒதுக்கப்பட்டு 1992-93 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 6 பீடித் தொழிலாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். அதைப்போல மேலும் 8 இடங்களில் காச நோயினால் பாதிக்கப்பட்ட ஏறத்தாழ 67 பீடித் தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காச நோய் தொடர்ந்து பீடி சுற்றுவதால் 25, 30 வயதுள்ள இளம் வாலிபர்களுக்கும் வந்து விடுகிறது. இதனால் அவர்களுடைய வாழ்க்கை நிலை பாதிக்கப்படுகிறது. ஏழையெளிய மக்கள் மீது அன்பும் பாசமும் வைத்துள்ள நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் பீடித் தொழிலாளர்களுக்கு காச நோய் தவிர மற்ற நோய் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற எப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் அதிகமுள்ள இடங்களில் புறநோயாளிகள் பிரிவு மருந்தகம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் பத்து இடங்களில் இந்த மருந்தகங்கள் நடத்தப்படுகின்றன. இது தவிர மேலும் 13 இடங்களில் மருந்தகம் அமைப்பதற்காக மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டு, இது ஹைதராபாத் நல ஆணையருடைய பரிசீலனையில் உள்ளது. முக்கூடலில் 50 படுக்கைகள்

கொண்ட மருத்துவமனை கட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நில ஆர்ஜிதம் செய்து தந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் காச நோயால் பாதிக்கப்படும்போது எந்தக் கம்பெனியிலிருந்து அவர்கள் பீடி இலை வாங்கிச் சுற்றுகிறார்களோ, அந்த கம்பெனி நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று ஏதாவது விதிமுறை அரசில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் மிகவும் சிறிய குறுகிய இடத்தில் கிட்டத்தட்ட பத்து அடிக்குப் பத்து அடி இடத்தில் 20, 30 பேர் வேலை செய்கிற காரணத்தால், காச நோய் ஒருவருக்கு இருந்தாலும் கூட, கொஞ்சம் கொஞ்சமாக நிறையப் பேர்களுக்குப் பரவ வாய்ப்பு இருக்கிறது. மேலும் காச நோய் என்பது வறுமை நோய். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தப்பட்டதைப் போல, மிகச் சிறப்பாக வெற்றி கண்ட அந்த முகாமைப் போல, தொழிலாளர் நலத்துறை மூலமாக வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் இருக்கிற அனைத்து பீடித் தொழிலாளர்களுக்கும், தமிழகத்தில் இருக்கிற அனைத்து பீடித் தொழிலாளர்களுக்கும், ஒரு சிறப்பு மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தி, அனைவருக்கும் சிகிச்சை அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, அதற்கான முகாம் ஏற்படுத்த தீவிரமாக ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பத்து இடங்களில்தான் மத்திய அரசு நடத்துகிற பீடித் தொழிலாளர்களுக்கான ஆஸ்பத்திரி இருக்கிறது.

1994 ஏப்ரல் 25]

தயவுசெய்து நான் கேட்பதெல்லாம், ஒரு தாலுகாவுக்கு ஒரு மருத்துவமனை என்று ஏற்படுத்தினால் நல்லது. மத்திய அரசு ஓரளவுக்குத்தான் வைத்திருக்கிறது. ஸ்டேட் கவர்ன்மென்ட் ஏதாவது பைனான்ஸ் இதற்காக உருவாக்கி இன்னும் பல மருத்துவமனைகளை ஏற்படுத்துமா ? அப்படி இல்லையென்றால் தொழிலாளர்களுக்கு இதுபோன்ற டி.பி.நோய் யார் யாருக்கு வந்திருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் அந்த நேரத்தில், ஒரு ஆயிரம் ரூபாய் என்ற அளவில் நிதியுதவி அளிப்பதற்கு அரசு ஏதாவது திட்டத்தை வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து இடங்களில் புற நோயாளிகள் மருந்தகம் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் 13 இடங்களில் அமைப்பதற்குத் திட்டம் வகுக்கப்பட்டு, மத்திய அரசுக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அனுப்பி இருக்கிறது. மேலும் புறநோயாளிகள் டி.பி. யால் பாதிக்கப்பட்டிருந்தால் ஆங்காங்கே இருக்கிற அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி.

முற்பகல் 10-45

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் காச நோய் போன்ற கொடிய நோயால் பாதிக்கப்பட்டு, சொல்லொணாக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப் படுகிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில், அவருடைய குடும்பங்கள் எல்லாம் அதிகமான கஷ்டத்திற்கு ஆளாக்கப்படுகின்ற நிலையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலவர் பழிவாங்காப் பகை, கெடுதல் நினைக்காத கோபம், மதியாரை மதிக்கும் மனம், ஏசியவர்களையும் ஏற்கும் குணம், பொங்கி எழுந்தாலும் பொறுமையாக சிந்திக்கும் ஆற்றல், சிந்தித்து முடிவு எடுத்து செம்மையாக நிறைவேற்றும் திறன் கொண்ட, எங்களது அன்னையினுடைய ஆட்சியில் அப்படிப்பட்ட ஏழைத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு என்று தனியாக சேமநல நிதி ஒன்றை ஏற்படுத்தி, அந்த நிதியின் மூலமாக, கஷ்டப்படுகின்ற தொழிலாளர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 377, திரு. கே. செல்வராஜ்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

377–

கோயம்புத்தூர் மாநகராட்சியின் முக்கிய சாலைகளில் பாதாள மின் கம்பி பதித்தல்

***15216*-**திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் முக்கிய சாலைப் பகுதியில் உள்ள மின்சாரக் கம்பிகளை மாற்றி, பாதாளக் கம்பி பதிப்பு செய்து மின்சாரப் பிரிவை நவீனப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில்; எப்போது அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி முக்கிய சாலைப் பகுதிகளில் உள்ள மின்சாரக் கம்பிகளை மாற்றி பாதாளக் கம்பி பதிப்பு செய்து மின்சாரப் பிரிவை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, கோவை மாநகராட்சியில் உள்ள முக்கிய சாலைப் பகுதிகளில், மின்சாரக் கம்பிகளை மாற்றி பாதாளக் கம்பி பதிப்பு செய்து மின்சாரப் பிரிவை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்று கூறினார்கள். கடந்த ஆண்டு மாநகராட்சியில் 3 மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு மாறாக கோவை ஆர்.எஸ். புரம், திவான்பகதூர் ரோடு பகுதிகளில் 1 கோடி ரூபாய் செலவில், பாதாளக் கம்பிகளைப் பதித்து, அந்தப் பணியைச் செயல்படுத்த-முதல்கட்டமாக பணிகளைச் செய்தும்—தொடர்ந்து மாநகராட்சி